பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 12 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இளையோர் அனைத்துத்துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஐந்து மற்றும் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கான கட்டாயத் தேர்ச்சி முறை ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. விவசாயிகளின் கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. இணைய இணைப்புக்கான நிலுவைத்தொகை தொடர்பாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் பொய்யான தகவலை தெரிவிப்பதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. **Tashkent** சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் அதிபன் பாஸ்கரன் பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>

இளையோர் அனைத்துத்துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய அரசு பணிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட 71 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன ஆணைகளை காணொலி வாயிலாக இன்று வழங்கி அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - மோடி (1) – 35 செகண்ட்ஸ்)*

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் அரசுப்பணிகளில் இளையோருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கென இயக்கம் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மோடி (2) – 35 செகண்ட்ஸ்)*

மகளிர் அனைத்துத்துறைகளிலும் சுயசார்பினை எட்ட வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

நாடு முழுவதும் 45 இடங்களில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சிகளில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

தமிழகத்தில் சிவகங்கை மற்றும் சென்னை ஆவடியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் 458 பேருக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

<<<<<<>>>>>>

ஐந்து மற்றும் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கான கட்டாயத் தேர்ச்சி முறை ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய கல்வித்துறை செயலர் திரு சஞ்சய்குமார், ஐந்து மற்றும் எட்டாம் வகுப்பு மாணவர்கள் ஆண்டுத்தேர்வில தோல்வியடைந்தால் இரண்டுமாத காலத்திற்குள் மறு தேர்வினை எழுத வேண்டும் என்று தெரிவித்தார்.

மறு தேர்விலும் சம்பந்தப்பட்ட மாணவர்கள் தோல்வியடைந்தால் தேர்ச்சி வழங்கப்படாது என்றும் அவர் கூறினார்.

இருப்பினும், தோல்வியடையும் மாணவர்கள் பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு சஞ்சய் குமார் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

விவசாயிகளின் கோரிக்கைகளை தமிழக அரசு உடனுக்குடன் நிறைவேற்றி வருவதாக வேளாண் துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேளாண் பணிகளுக்கு தேவையான போதிய உரங்கள் கையிருப்பில் உள்ளதாக தெரிவித்தார்.

கரும்புக்கு உரிய விலை வழங்கப்படுவதாகவும் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கூறினார்.

<<<<<<>>>>>

பள்ளி கல்வித்துறை சார்பில் பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை எதுவும் இல்லை என்று அத்துறைக்கான அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தவறான தகவலை தெரிவித்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், பள்ளிக்கல்வித்துறையின்கீழ் செயல்படும் தொழில்கல்வி இணை இயக்குனர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு, பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையை உடனடியாக செலுத்த வேண்டும் என்று கடிதம் எழுதியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களின் கல்வியோடு விளையாடாமல், இணைய இணைப்புக்கான நிலுவைத்தொகையை பள்ளிக்கல்வித்துறை உடனடியாக செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் அனைத்துத்துறைகளிலும் பணிகள் முறையாக நடைபெறவில்லை என்றும் திரு அண்ணாமலை குறை கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

விவசாயிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

விவசாயிகள் நலனுக்கு உயர் முன்னுரிமை அளித்து மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டம், மண்வள அட்டை உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று அரியலூர் மாவட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

*(வாய்ஸ் பைட் - விவசாயிகள் - 53 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

மின்வாரிய ஊழியர்கள் இருவர் பணியின்போது மின்சாரம் தாக்கி உயிரிழந்த விவகாரம் தொடர்பாக விளக்கம் கோரி, தேசிய மனித உரிமைகள் ஆணையம், தமிழக அரசின் தலைமைச்செயலர் மற்றும் காவல்துறை தலைவருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

உயர் அழுத்த மின்கம்பியின் பழுதை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோது இவர்கள் உயிரிழந்ததாக ஊடகங்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

தாமாக முன்வந்து இதுகுறித்த விசாரணையை மேற்கொண்டுள்ள தேசிய மனிதஉரிமை ஆணையம், இச்சம்பவம் தொடர்பான அறிக்கையை இரண்டு வாரத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

ஊடகங்களில் வெளியான செய்திகள் உண்மையாக இருக்கும்பட்சத்தில் மின்வாரியத்தின் அலட்சியப்போக்கே இந்த உயிரிழப்புக்கு காரணம் என்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பத்திரப்பதிவுக்கான கட்டண உயர்வு ஏழை மக்களை பாதிக்கா வண்ணம் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

உள்ளாட்சித்தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதே விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிலைப்பாடு என்றும் திரு தொல் திருமாவளவன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

ராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து மத்திய இணையமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

--------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் மத்திய அரசின் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ், அனைத்து குடியிருப்புகளும் பயனடைந்திருப்பதாக கண்காணிப்புக்குழு தலைவர் திரு ஜெகத்ரட்சன் கூறியுள்ளார்.

-----------------

கடலூர் மாவட்டத்தில் ஆட்சிமொழி சட்ட வாரம் தொடர்பான விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு பகுதியில் வனவிலங்குகளிடமிருந்து மனிதர்களை பாதுகாக்க சூரியஒளி மின்வேலி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி கூறியுள்ளார்.

----------------

நாமக்கல் மாவட்டத்தில் அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி உமா இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

-------------

தூத்துக்குடி மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாக, 84 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட உளுந்து, பாசிப்பயறு, மிளகாய் போன்றவை சேதமடைந்துள்ளதாக ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

-------------

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Tashkent** சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் அதிபன் பாஸ்கரன் பட்டம் வென்றார்.

ஒன்பதாவது மற்றும் இறுதிச்சுற்று முடிவில் ஏழரை புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

-----------------

உலக ஜுனியர் **Pencak Silat** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Nusrath Fathima** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

அபுதாபியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 58 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

ஹாக்கி அணியின் கேப்டன் ஹர்மன் பிரீத் சிங் மற்றும் பாரா தடகள வீரர் பிரவீன்குமார் ஆகியோர் கேல் ரத்னா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

----------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான எஞ்சிய இரண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பதற்கான இந்திய அணியில் **Tanush Kotian** சேர்க்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து அஷ்வின் ஓய்வுபெற்றதையடுத்து, இவர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**<<<<<<END>>>>>**